# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 44

# பத்து வெள்ளிக்காசின் இரகசியம்




## The Mystery of the Ten Silver Coins

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பத்து வெள்ளிக்காசின் இரகசியம்

## The Mystry of Ten Silver Coins

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே,

இன்றைக்கு நாம் இயேசுக்கிறிஸ்து கூறின காணாமற்போன வெள்ளிக்காசு பற்றின உவமையை பார்ப்போம். இதில் மறைந்திருக்கிற இரகசியங்கள் என்ன? அதன் முக்கியத்துவங்கள் என்ன? என்றும் தியானிக்கலாம். இந்த உவமையை பின்வரும் வசனப் பகுதியில் வாசிக்கிறோம் -

**லூக்கா 15:8-10**

***"அன்றியும் ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால் விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ. கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக்காரிகளையும் வரவழைத்து, காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன். என்னோடுகூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"***

இந்த உவமை லூக்கா எழுதின சுவிசேஷத்தில் 15ம் அதிகாரத்தில் இயேசு பேசியுள்ள மற்ற இரண்டு உவமைகளான - *"காணாமல்போன ஆடு"* மற்றும் *"வழி தப்பிய குமாரன்"* ஆகிய உவமைகளுக்கு நடுவில் சொல்லப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இந்த உவமைகளை வாசிக்கையில் பின்வரும் கேள்விகள் எழுகின்றன -

- **அந்த ஸ்திரீ யார்?**
- **அந்த 'பத்து வெள்ளிக்காசுகள்" எதைக் குறிக்கின்றன?**
- **அவற்றில் ஒரு வெள்ளிக்காசு தொலைந்தவுடன், அந்த ஸ்திரீ ஏன் வருந்தினாள்?**
- **காணாமற்போன 'வெள்ளிக்காசு" கண்டுபிடிக்கப்பட்டவுடன், அவள் மகிழ்ச்சியடைந்ததில் உள்ள முக்கியத்துவம் என்ன?**


இக்கேள்விகள்அனைத்திற்கும் இன்று விடைகளைக்காண்போம்.

இதை நேரடி அர்த்தமாக புரிந்துகொள்ள முயற்சிப்பது கேலிக்கு இடமளிக்கிறது. ஏனெனில் "பத்து வெள்ளிக்காசுகளில் ஒன்று காணாமல் போனவுடன், அந்த ஸ்திரீ அதை கண்டுபிடிக்க அதிக பிரயாசப்படுவதும், கண்டுபிடித்தவுடன் தன் நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரோடு சேர்ந்து மகிழ்வதும் நடைமுறையில் நடக்காத விஷயங்கள். காணாமல்போன அந்த ஒரு வெள்ளிக்காசை கண்டவுடன் அவள் மகிழ்ந்து, அதை கொண்டாடி வெளிப்படுத்தினதைக் காண்கிறோம்.

இது இயேசு பேசின உவமைகளில் ஒன்று என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். கர்த்தருடைய மற்ற உவமைகளைப்போல இந்த உவமைக்குப்பின்னால் இருக்கக்கூடிய ஆவிக்குரிய பொருளை புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டியது அவசியம்.

அதற்கு முன்பு, இந்த உவமை சொல்லப்பட்டுள்ள பின்னணியையும், அந்த ஸ்திரீ மற்றும் பத்து வெள்ளிக்காசுகளைப் பற்றியும் நாம் புரிந்துகொள்வது அவசியம்.

இங்கு நம் கர்த்தர் ஒரு யூதன் என்பதையும், அவர் தம் ஜனங்களாகிய யூதர்களுக்கு




மத்தியில் இவ்வார்த்தைகளைப் பேசினதையும் நினைவில் கொள்ளவேண்டும். எனவே **இந்த உவமையானது, யூதர்களுடைய திருமணத்தில் கடைப்பிடிக்கப்படும் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தோடு தொடர்புள்ளதாக இருக்கவேண்டும்.**

அவர்களுடைய கலாச்சாரத்தின்படி, திருமணத்திற்கு ஒருவருடம் முன்பே நிச்சயதார்த்தம் எனும் சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்படுவது வழக்கம்.

**அந்த நிச்சயதார்த்த நிகழ்ச்சியில், மணமகனுடைய குடும்பத்தாரின் அடையாளம் பதித்த 'பத்து வெள்ளிக்காசுகள்" மணப்பெண்ணுக்கு பரிசளிப்பது வழக்கமாயிருந்தது.**

இது அவளுக்கு விலையேறப்பெற்ற பொக்கிஷமாக கருதப்படும். அந்த காசுகளை அவள் திருமணநாள் வரை ஒரு வருடம் முழுவதும் பாதுகாத்து , திருமணநாளின்போது, ஒரு சங்கிலியில் அவைகளைசேர்த்து, தன்னுடைய நெற்றியில் அந்த சங்கிலியை அணிந்து, அவள் நேர்மையுள்ளவளாகவும், நம்பிக்கையுள்ளவளாகவும் தன் நம்பகத்தன்மையை வெளிப்படுத்தவேண்டும்.



**அந்த பத்து 'வெள்ளிக்காசுகளும்" ஒரு அழகான வெள்ளி சங்கிலியில் இணைத்து ஒரு ஆபரணமாக அணிவிக்கப்பட்டு காண்பிக்கப்படும்.** இப்படி அந்த காசுகளில் ஏதேனும் ஒரு காசு தொலைந்துபோனால் அது ஒரு பெரிய தவறாக கருதப்பட்டு, திருமணமே நிறுத்தப்படும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும்.

**ஆம். திருமணம் நடந்ததா அல்லது நடக்காதா என்பதை தீர்மானிப்பதாக இவ்விஷயம் கருதப்பட்டு - அந்த மணப்பெண்ணுடைய எதிர்காலமே கேள்விக்குரியதாகிவிடும்**

இதன்மூலம், ஒரு வெள்ளிக்காசு காணாமல் போவது எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்கிறோம். அதேசமயம், அதை மீண்டும் கண்டுபிடிக்கையில் எவ்வளவு மகிழ்ச்சி வெளிப்படும் என்பது புரிகிறது.

இவ்விதமாக இவ்வுவமைக்கான பின்னணியை அறிந்தபின்பு, அதன் “ஆவிக்குரிய” விளக்கம் என்ன என்பதை அறிய முற்படலாம். ஏனெனில், இயேசுவினுடைய அனைத்து உவமைகளுக்கும் கண்டிப்பாக ஒரு ஆவிக்குரிய முக்கியத்துவம் இருக்கும் என்பது உண்மையே.

## ஸ்திரீ யாரைக் குறிக்கிறது?

இந்த ஸ்திரீ இயேசுகிறிஸ்துவின் சபைக்கு அடையாளமாக இருக்கிறாள். ஒரு

கன்னிகையாகிய இவள், ஆட்டுக்குட்டியானவருடன் அவருடைய இரண்டாம் வருகையின்போது கல்யாணத்தில் இணைவதற்காக இப்பொழுது நிச்சயம் செய்யப்பட்டுள்ளாள். இவ்விதமாக, சபையானது கிறிஸ்துவுக்கு நிச்சயிக்கப்பட்டுள்ளதை நாம் வசனத்தில் வாசிக்கலாம் -

2கொரிந்தியர் 11:2

***"நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்"***

ஆம். உண்மைதான். **சபையானது கிறிஸ்துவுக்காக 'நியமிக்கப்பட்டு" - அவரோடு திருமணத்தில் இணையும்** என்று அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. இது அவருடைய முதலாம் வருகையில் நிறைவேறியது. அப்பொழுது அவர் மூலமாக "கிறிஸ்துவின் மணவாட்டியாவதற்காக" தேர்ந்தெடுத்தலுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டது. மேலும் கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது இந்த கல்யாணம் நிறைவேறும் என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

வெளிப்படுத்தல் 19:7

***" நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது"***

இதுவே இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்குமான கலியாண நாளாகும்.

இவ்விதமாக இந்த உவமை கிறிஸ்துவுடனான சபையின் கல்யாணத்தைக் குறித்து பேசுகிறது. அது "பத்துவெள்ளிக்காசோடு" சம்பந்தப்பட்டதாக இருக்கிறது.

வேதத்தில் "வெள்ளி" என்பது எதைக் குறிக்கிறது? இதற்கான பதிலை கீழே காண்போம் -

சங்கீதம் 12:6

***"கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது"***

ஆம். வெள்ளி என்பது தேவனுடைய வார்த்தைக்கு அடையாளமாக இருக்கிறது. அதேசமயம், தேவனுடைய வார்த்தைகளைக் குறித்து நாம் வாசிக்கையில், அது -



***யோவான் 17:17 "உம்முடைய வசனமே சத்தியம்"*** என்று அறிவோம்
.

இவ்விதமாக இந்த "வெள்ளிக்காசுகள்" என்பது தேவனுடைய வார்த்தையாகிய - சத்தியத்தைக் குறிப்பதாக இருக்கிறது.

அவைகள் **பத்து 'வெள்ளிக்காசுகளாக" சொல்லப்பட்டிருப்பது இங்கு 'பத்து சத்தியங்களை" குறிக்கிறது.** அவைகள் பின்வரும் வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன -

ஆதியாகமம் 24:10

***"பின்பு அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில்***



*பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டுபோனான்..”*

ஆம். இங்கு **ஆபிரகாம் - பரலோகப் பிதாவையும்**
**அவருடைய ஊழியக்காரனாகிய எலியேசர் -**
**பரிசுத்தஆவியையும்**
**ஆபிரகாமுடைய 'பத்து ஒட்டகங்கள்" - பத்து தெய்வீக சத்தியங்களையும்**
**குறிக்கிறது. இந்த சத்தியங்கள் அனைத்தையும்**
**ஆதிகால சபையாகிய ஸ்திரீ பெற்றிருந்தாள்.**

பின்பு நடந்தது என்ன? இந்த உவமையில் நாம் காண்கிறபடி அந்த “ஸ்திரீ” அந்த வெள்ளிக்காசுகளில் ஒன்றை தொலைத்தாள். அது சபையானது ஒரு மாபெரும் சத்தியத்தை பற்றின அறிவிலிருந்து விலகியதை குறிக்கிறது.

பின்பு நடந்தது என்ன? உவமையை நாம் பார்க்கையில் அந்த ‘ஸ்திரீ”
**"விளக்கை" கொளுத்தி...**
**"வீட்டை" பெருக்கி...**
**அதைக் கண்டுபிடிக்கிறவரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடினாள்.**

இது காணாமல்போன தெய்வீக சத்தியத்தை சபையானது எப்படி திரும்ப பெற்றுக்கொண்டது என்பதைக் குறிக்கிறது.
அப்படி காணாமற்போன தெய்வீக சத்தியம் எது என்பதை அடையாளம் காண்பிப்பதற்கு முன்பு, இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள உருவக பாஷையை புரிந்துகொள்ள நாம் முதலில் முயற்சிப்போம். ஆம். இங்கு **‘ஸ்திரீ”** கொளுத்துகிறதாக குறிப்பிடப்பட்டுள்ள **‘விளக்கு”** என்பது என்ன? இதன் முக்கியத்துவத்தை வசனத்தில் வாசிக்கலாம் -

**சங்கீதம் 119:105**

***“உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்,***
***என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது”***

விளக்கு என்பது இங்கு தேவனுடைய வார்த்தையாகிய வேதத்தைக் குறிக்கிறது. மேலும் தேவனுடைய வார்த்தையிலேயே நாம் சத்திய ”வெளிச்சத்தை” காண்கிறோம்.
இங்கு அந்த ஸ்திரீ பெருக்குவதாக சொல்லப்பட்டுள்ள **‘வீடு”** எதைக் குறிக்கிறது?
இதற்கான பதிலை பின்வரும் வசனத்தில் காண்கிறோம் -

**1தீமோத்தேயு 3:15**

***“தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது”***

ஆம். அந்த வீடு சபையைக் குறிக்கிறது. அப்படியானால் சபையானது “பெருக்கப்பட்டதை” எவ்விதத்தில் புரிந்துகொள்வது? இது 1517ம் வருடம் துவங்கின சீர்த்திருத்தலின் காலத்தைக் குறிக்கிறது. அப்பொழுது மக்களின் பாஷைகளான ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மானிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட வேதம் தன்னுடைய ‘சத்திய வெளிச்சத்தை” ஜனங்களுடைய இருதயத்தில்

பிரகாசித்து அவர்கள் வீட்டிற்குள் வந்து சேர்ந்திருந்த"***குப்பைகளை***" காண உதவியது.

இந்த "***குப்பை***" எதைக் குறிக்கிறது

இது **'இருண்ட யுகங்களில்"** சபையாகிய **'வீட்டிற்குள்"நுழைந்த கள்ளபோதனைகளை** குறிக்கிறது. இந்த குப்பைகளாகிய போதனைகள் வருமாறு -

**- அழியாமையும், சாகாத தன்மையம் பெற்ற ஆத்துமா**

**- நித்திய வேதனை ஸ்தலமான நரகம்**

**- பணம் மற்றும் ' பாவ மன்னிப்பு சீட்டு" மூலமாக பெறப்படும் பாவமன்னிப்பு**

**- மரியாள் மற்றும் ' புனிதர்கள்" மூலம் ஏறெடுக்கப்படும் ஜெபம்**

**- மற்றும் அநேக உபதேசங்கள்.**

இந்த "***விளக்கு வெளிச்சத்திலும்***"வேத ஆராய்ச்சியின் மூலமாகவும், வசனங்களில் காணப்படாததும் எவ்விதமான வேத அடிப்படையும் இல்லாத இவ்வனைத்து போதனைகளும் வெளியாக்கப்பட்டது.

இவையனைத்தும் "***குப்பையான***" நம்பிக்கைகள் என்று கண்டுபிடிக்கப்பட்டு படிப்படியாக துடைத்துப்போடப்பட்டது. இறுதியாக நாம் வாசிக்கையில் -

**'அதைக் கண்டுபிடிக்கிறவரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடினாள்"**

காணாமல்போன அந்த "***வெள்ளிக்காசை***" ஜாக்கிரதையாய் தேடி கண்டுபிடிக்க சில காலம் தேவைப்பட்டது.

இங்கு "***ஜாக்கிரதையாய் தேடுவது***" எதைக்குறிக்கிறது என பின்வரும் வசனத்தில் காணலாம் -

ஏசாயா 34:16

"***கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள், இவைகளில் ஒன்றும் குறையாது***"

தேவனுடைய வார்த்தையாகிய வேதத்தை கவனமாக ஆராய்வதைக் குறிக்கிறது. இங்கு

**"ஜாக்கிரதையாய்த் தேடுவது" என்பது குறிப்பிட்ட காலத்துக்கு மேற்கொள்ளப்படும் வேத ஆராய்ச்சியைக் குறிக்கிறது.**

எனவே இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற உருவகபாஷையினை அறிந்தவர்களாக, இப்பொழுது நாம் இந்த உவமையின் முடிவையும்,அதன் பொருளையும் அதன் முக்கியத்துவத்தையும் காண்போம்

அந்த விளக்கை பிடித்திருந்த ஸ்திரீ, அதன் வெளிச்சம் பெருக்கப்பட்ட குப்பையை காண்பித்ததை உணர்ந்தாள். பின்பு படிப்படியாக அந்த விளக்கின் வெளிச்சமானது" காணாமல்போன "***வெள்ளிக்காசை***" காண்பித்தது. இது குறிப்பிட்ட காலப்பகுதியில் நடந்த வேத ஆராய்ச்சி, கவனமாக வேத வாசிப்பு காணாமல்போன அந்த"***வெள்ளிக்காசை***" கண்டுபிடிக்க வழிநடத்தினதை காண்கிறோம். அந்த மாபெரும் சத்தியம் எது?

வேதத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்டதாக காணப்படும் மாபெரும் சத்தியமாகும்.

பொதுவாக வெகு சில கிறிஸ்தவர்களே இந்த புத்தகத்தை படிக்க முன்வருவதை நாம்

அறிவோம். மேலும் இந்த இரண்டு வசனங்களும் வெளிப்படுத்தின புத்தகத்தின் கடைசி அதிகாரங்களில் காணப்படுகிறதை பின்வரும் வசனங்களில் காணலாம் -

**வெளிப்படுத்தல் 20:4**

***"தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்"***

ஆம். அது பூமியின் மீதான கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியை பற்றின மாபெரும் சத்தியமாகும். இதைக் குறித்து பின்வரும் வசனத்திலும் வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 20:6**

***"இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்"***

தேவனுடைய மாபெரும் தெய்வீக திட்டத்தில் அவருடைய குமாரனாகிய இயேசு இந்த பூமியை ஆயிரவருடங்கள் ஆளுகை செய்வார். இது கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியாகும்.

மேலும் இந்த இரு வசனங்களிலும் அந்த ஆயிரவருட அரசாட்சியை சபையானது கிறிஸ்துவோடுகூட ஆளுகை செய்வதைப் பற்றின சத்தியத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த மாபெரும் சத்தியத்தை பற்றின அறிவை பெற்றவராக அப்போஸ்தலனாகிய பவுல் பின்வரும் வார்த்தைகளைப் பேசினார் -

**2தீமோத்தேயு 2:12**

***"அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் "***

இந்த உவமையில் அந்த ***"ஸ்திரீ"*** ஒரு ***"வெள்ளிக்காசை"*** தொலைத்ததுபோல இங்கும் சபையானது படிப்படியாக இந்த மாபெரும் சத்தியத்தை பற்றின அறிவை இழந்து தற்போது ***"மாம்சத்திலிருக்கும்பொழுதே"*** கிறிஸ்துவின் பிரதிநிதிகளாயிருந்து ஆளுகைசெய்யவேண்டும் என்று நினைத்தனர். இதன்மூலம் கிறிஸ்துவுடனான ஆளுகை என்பது அவருடைய இரண்டாம் வருகையின்போது விசேஷமான உயிர்த்தெழுதலின் சரீரத்தில், திவ்விய சுபாவத்தில் சம்பவிக்கும் என்பதை உணரத் தவறினர்.

இந்த காணாமற்போன மாபெரும் சத்தியம் அல்லது ***"வெள்ளிக்காசு"*** கண்டுபிடிக்கப்பட்டது உண்மையான சபைக்கு மாபெரும் சந்தோஷத்தை பெற்றுத்தந்தது.

இதன்மூலம் ஒருவர் தம்முடைய அனைத்தையும் விசுவாசத்துடன் பலிசெலுத்தி கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்ற காரணமாயிருந்தது.

அந்த வெள்ளிக்காசுகளில் ஒன்று இவ்வளவு விலையேறப்பெற்ற சந்தோஷத்திற்குக் காரணமாக இருக்கும் பட்சத்தில் , மற்ற ஒன்பது ***"வெள்ளிக்காசுகளும்"*** எவ்வளவு விலையேறப்பெற்ற சந்தோஷத்தைக் கொடுக்கும் என்பதை உணரவேண்டும்.


நாமும் இந்த ***"பத்து வெள்ளிக்காசுகளை"*** அல்லது பத்து மாபெரும் தெய்வீக சத்தியங்களின் பொருளையும் அதன் முக்கியத்துவத்தையும் அறிய ஆவலாயிருக்கிறோம்.

இப்பொழுது பத்து வெள்ளிக்காசுகளைப் பற்றிய நம் ஆராய்ச்சிக்குள் கடந்துசெல்வோம் -



## முதலாம் வெள்ளிக்காசு

# "சிருஷ்டிப்பு"



முதலாம் வெள்ளிக்காசு என்பது **மனிதனுடைய சிருஷ்டிப்பைப் பற்றிய மாபெரும் தெய்வீக சத்தியமாகும்.** இதைக் குறித்து பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம் -

ஆதியாகமம் 1:26

***"பின்பு தேவன் - நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்"***

தேவனுடைய வார்த்தைகளில் முதலாவது மாபெரும் தெய்வீக சத்தியமாக இருப்பது - மனிதனை சிருஷ்டித்தது பற்றின சாட்சியாகும்.

"***நமது சாயலாகவும்... நமது ரூபத்தின்படியேயும்***" - இது மனிதன் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுக்கும் அவருடைய நீதியின் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்து ஜீவிப்பதன்மூலம் நித்தியத்திற்கும் வாழக்கூடிய அதிகாரத்தை பெற்றிருந்ததைக் குறிக்கும்.

ஆனால் "***பொய்க்குப் பிதாவும்***", ***இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய***" சாத்தான்மனிதனை வஞ்சிக்க முயன்றதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

ஏசாயா 5:20

***"இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து.."***

இவ்விதமாக அவன் தெய்வீக சத்தியங்கள் இருந்த இடத்தில் பொய்யையும், கள்ள உபதேசங்களையும் பெயர்சபையில் மாற்றி அமைத்தான்.

இவ்விதமாக முதலாம் மாபெரும் தெய்வீக சத்தியத்திற்கு இணையான பொய்யாக மிகவும் பிரபலமாக நம்பப்படுகிறதும், ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான
"குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதன் தோன்றினான் என்ற டார்வீனின் கொள்கை" இருக்கிறது.

மனிதன் உண்மையில் "***தேவனுடைய சாயலாகவும்... ரூபத்தின்படியேயும்***" சிருஷ்டிக்கப்பட்டான் ' என்று தேவனுடைய வார்த்தையில் காணப்படுகிற எளிமையான, மகிமையான சத்தியத்தை நம்புவதைக்காட்டிலும், அவன் குரங்கைப்போன்ற கீழான நிலையிலிருந்து முன்னேற்றமடைந்தான்" என்று நம்புவது இலகுவாக இருக்க காரணமானது.கற்பனைசெய்து

பார்க்கையில், மனுக்குலம் எப்படிப்பட்ட குருட்டாட்டத்தில் சிக்கியுள்ளது என்பதை உணரமுடிகிறது.





இரண்டாம் வெள்ளிக்காசு

## "வீழ்ச்சி"

தேவனிடத்திலிருந்து பெற்ற இரண்டாம் மாபெரும் தெய்வீக சத்தியத்தைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்-

ஆதியாகமம் 1:16,17

***"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி - நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்றுகட்டளையிட்டார்"***

இது ஆதாம் மற்றும் ஏவாளுக்குத் தம்முடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும்பொருட்டு தேவன் கொடுத்த கட்டளையும் - எளிமையான சோதனையுமாகும். இதற்கு பின்பு நடந்தவற்றைக் குறித்து நாம் வாசிக்கையில் -

ஆதியாகமம் 3:4-6

***"அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி - நீங்கள் சாகவே சாவதில்லை, நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும்... அப்பொழுது ஸ்திரீயானவள்.. அதின் கனியைப் பறித்து, புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் புசித்தான்"***

ஆம். இது ஏவாள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல்போனதையும், பின்பு ஆதாமும் கீழ்படியாமையில் அவளோடு இணைந்ததையும் விவரிக்கிறது.

இவ்விதமாக தேவனுடைய வார்த்தைகளுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாமல்போனதே பாவம் என்று அழைக்கப்பட்டதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

1யோவான் 3:4

***"நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்"***

மேலும் பாவமானது அதற்குரிய தண்டனையை பெற்றிருப்பதையும் வாசிக்கிறோம்.

ரோமர் 6:23

***"பாவத்தின் சம்பளம் மரணம்"***

ஆம். பாவம் மரணத்துக்கு வழிநடத்துகிறது. இவ்விதமாக பரிபூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்த மனிதன் ***"வீழ்ந்தான்"***

இந்த வீழ்ச்சியைக் குறித்து பின்வரும் வசனத்தில் தெளிவாக வாசிக்கிறோம் -

ரோமர் 5:12

***"இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று"***

இந்த வசனம் மனிதனுடைய வீழ்ச்சியை விளக்கி, அதே சமயம் இந்த வீழ்ந்துபோன நிலையில் பாவம் மற்றும் மரணம் ***"கர்ப்பத்திலிருந்து"*** (சங்கீதம் 51:5) சுதந்தரிக்கப்பட்டு, அதன்மூலம் உலக மனுக்குலம் அனைத்தின்மேலும் கடந்துசெல்வதை விவரிக்கிறது. மேலும், மனிதன் சிருஷ்டிக்கப்பட்டபோது அவனுடைய நிலையைக் குறித்து வேத வசனங்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறது -

***"அவன் ஜீவாத்துமாவானான்.."***

ஆம். மனிதனே ஆத்துமாவாக இருக்கிறான். மாறாக அவன் ஆத்துமாவை பெற்றிருக்கவில்லை. இவ்விதமாக பாவத்தின்மூலம் ஆத்துமா மரிப்பதை பின்வரும் வசனத்தில் தெளிவாக வாசிக்கிறோம்

**எசேக்கியேல் 18:4** ***"பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்.."***

மேலும் விழுந்துபோன நிலையில் சுதந்தரிக்கப்பட்ட பாவம் அனைவராலும் பெற்றுக்கொள்ளப்பட்டதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

சங்கீதம் 22:29

***"ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே"***

ஆம். மனிதனுடைய வீழ்ச்சியைப் பற்றின சத்தியம் மிகத் தெளிவாக இருக்கிறது. இந்த தெய்வீக சத்தியத்திற்கு இணையான சாத்தானுடைய பொய் என்பது உலக முழுவதும் நம்பப்படுகிற போதனையான

***"அழியாமையும், சாகாத தன்மையையும் பெற்ற மனித ஆத்மா"*** பற்றின போதனையாகும்.

இந்த கொள்கை மனிதன் பாவத்தின்மூலம் பரிபூரண நிலையிலிருந்து விழுந்ததை மறுக்கிறது. மேலும் ஆத்துமாவினுடைய முழுமையான அழிவை மறுத்து,அது அழிக்கமுடியாத ஒன்று என போதிக்கிறது. இந்த கொள்கை இன்று அனைத்து மதங்களின்மூலம் ***"கிறிஸ்தவத்திலும்"*** சேர்த்து பரப்பப்படுகிறது.



## மூன்றாம் வெள்ளிக்காசு

## "ஈடுபலி"



வேதத்தில் மனிதனுடைய ***"வீழ்ச்சியை"*** அடுத்து தேவனுடைய மாபெரும் தெய்வீக சத்தியம், ***"விழுந்துபோன"*** மனுக்குலத்தை இரட்சிக்க ஏற்படுத்தின திட்டம் இருக்கிறது -

1தீமோத்தேயு 2:5,6

***"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே,***

***எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே, இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது"***

இவ்வசனம் மூன்றாம் மாபெரும் தெய்வீக சத்தியமாக - ஈடுபலி இருப்பதை விவரிக்கிறது.

***"வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன்"***

என்ற தெய்வீக நீதியை நிறைவேற்றவே தம்மை ஈடுபலியைக் கொடுத்தார்.

இவ்விதமாக இயேசு மாம்சத்தில் வந்தது, தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதாக இருப்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

ஓசியா 13:14

***"அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன். அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்.."***

இதை தேவன் எப்படி நிறைவேற்றினார் எனில், இயேசு **"இரண்டாம் ஆதாமாக"** ஆதாமைப்போல் ஒரு பரிபூரண மனிதனாக அனுப்பியதன் மூலம் நிறைவேற்றினார். ஆம்.இயேசு தாமாக வரவில்லை. தேவனேஅவரை அனுப்பினார் என்பதை பின்வரும் வசனத்தில் தெளிவாக வாசிக்கிறோம் -

யோவான் 3:16

***"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை... தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"***

தொடர்ந்து வாசிக்கையில் ,

யோவான் 8:42

***"ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன். நான் சுயமாய் வரவில்லை. அவரே என்னை அனுப்பினார்"***

இவ்விதமாக இயேசு ஆதாமுக்கு நிகரான, சரிநிகர் சமான விலையாக மாறி, ஆதாமையும், ஆதாமுக்குள் முழு மனுக்குலத்தையும் மீட்க வந்தார் என்பதை வாசிக்கிறோம்

1கொரிந்தியர் 15:21,22

***"மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்"***

இயேசுவே இவ்வார்த்தைகளைப் பேசினதைக் காண்கிறோம் -

***"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்"***

இப்பொழுது இதற்கு இணையாகவும், இந்த சத்தியத்தை மறைக்க சாத்தான் கூறின பொய்யானது, இன்று பெயர் சபைகளில் இயேசுவினுடைய இரட்சிப்பின் வேலையானது அவரை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவராகிறவர்களுக்கு மாத்திரமே என்று நம்பப்படுவதில் காணப்படுகிறது. இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாக பின்வரும் வசனத்தை முன்வைக்கின்றனர் -

அப்போஸ்தலர் 4:12

***"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்"***

இதன் காரணமாக பெயர் கிறிஸ்தவம் இடைவிடாத ஊழிய முயற்சிகளின் மூலம் இந்தியாவையும், உலகமனைத்தையும் மனமாற்றம் செய்ய பிரயாசப்படுகின்றது.

ஆனால் பாவத்திலும், மரணத்திலுமிருந்து இரட்சிக்கப்படுவதற்கான ***"ஒரே வழியாக"*** இயேசு இருப்பதையே இங்கு பவுல்அப்போஸ்தலன் கூறுகிறார். ஆனால் மனுக்குலத்தை மீட்பதற்கான தேவனுடைய திட்டம் நிறைவேறும் விதத்தை இவ்வசனம் தெளிவாக விளக்குவதில்லை. ஏனெனில் அது சுவிசேஷயுகம் மற்றும்ஆயிரவருட அரசாட்சியின் காலமாகிய இரண்டு யுகங்களை உள்ளடக்குகிற இரண்டு இரட்சிப்புகளைப் பற்றின இரகசியமாக இருக்கிறது.



### நான்காம் வெள்ளிக்காசு

## "நீதிமானாக்கப்படுதல் "

ஈடுபலி என்ற மாபெரும் தெய்வீக சத்தியத்திற்கு அடுத்தபடியாக, தேவனுடைய மாபெரும் தெய்வீக சத்தியம் பாவத்திலிருந்து பாவி விடுவிக்கப்படும் விதம் பற்றினதாக இருப்பதை வாசிக்கிறோம் -

**ரோமர் 1:17**

***"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது"***

ஆம். பாவங்கள் மன்னிக்கப்படுகிற விதத்தை பற்றின நான்காம் மாபெரும் தெய்வீக சத்தியத்தை இவ்வசனம் விவரிக்கிறது. அது ***"விசுவாசத்தின்"*** மூலமாகும்.
விசுவாசம் என்பது என்ன? அது இயேசுவின்மீதும் அவருடைய ஈடுபலியின் விலைக்கிரயத்தின்மீதும் நம்பிக்கை வைக்கும் விசுவாசமாகும்.

இந்த விசுவாசம் ஒரு பாவிக்கு பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற்றுத் தருவதாக பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**அப்போஸ்தலர் 10:43**

***"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்"***

ஆம்.இவ்விதமாக ஒரு பாவி ***"நீதிமானாக்கப்படுகிறார்"***

இது தேவனிடத்திலிருந்து கிருபையாக பெறப்படும் நீதிமானாக்கப்பட்ட நிலையாகும்.

இது ஒரு பாவியினுடைய ***"பாவ நிலையை "*** மூடுகிற வஸ்திரமாக வசனங்களில்

அடையாளப்படுத்தப்படுகிறது-

ஏசாயா 61:10

***"அவர் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்"***

ஆம். விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ளுகிற பாவத்திற்கான இந்த "***மூடல்***", நீதியின் சால்வையாக இங்கு காண்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த சால்வையைப் பெற்றுக்கொண்டபிறகு செய்யப்படுகிற பாவங்கள் அதின்மீது கறைகளையும் சுருக்கங்களையும் ஏற்படுத்துகிறது. அவை பின்வரும் வசனத்தில் உள்ள முறைமையின் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது-

1யோவான் 1:8-9

***"நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"***

ஆம். அது பாவங்களை அறிக்கை செய்வதன்மூலம் மன்னிக்கப்படுகிறது. இவ்வாறு ஒரு பாவி தனக்கு முன்பாக நிற்கவும், ஜெபத்தின்மூலம் தன்னிடத்தில் சேரவும் தேவன் அவனை "***தகுதியுள்ளவனாக***" மாற்றுகிறார்.

இந்த மாபெரும் சத்தியத்தை மறைக்க, சாத்தான் ஏற்படுத்தின பொய் இரண்டு கோணங்களை உடையது -

ரோமன் கத்தோலிக்கர்களுக்கு இந்த பாவமன்னிப்பும், நீதிமானாக்கப்படுதலும், பாதிரியார்களிடம் செய்யப்படும் "***புனித சமயச் சடங்கான" பாவ அறிக்கை***"செய்வதன்மூலம் பெறப்படுவதாக போதிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து ***பணத்திற்கு விற்கப்பட்ட "பாவ மன்னிப்பு சீட்டு***" வாங்குவது ஒருவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான அடையாளமாக கருதப்பட்டது.

புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களுக்கு நீதிமானாக்கப்படுதல் என்பது ***கல்வி , மருத்துவம் மற்றும் ஊழியங்கள் என்ற சமூக சேவைகளான "கிரியைகள்***"மூலம் பெறப்படுவதாக போதிக்கப்பட்டது. ஆனால் இந்த நல்ல கிரியைகள் பாவத்திற்கான "***மூடல்***" என்பதைப் பற்றி தேவன் என்ன நினைக்கிறார் என்பதை குறித்து வாசிப்போம் -

ஏசாயா 64:6

***"நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம். எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது"***



## ஐந்தாம் வெள்ளிக்காசு

## "பரிசுத்தமாக்கப்படுதல்"

தேவ குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக வளர்ச்சியடையும் இந்த வழிமுறையைக்

குறித்து நாம் வாசிக்கலாம் -

ரோமர் 12:1

***"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"***

ஏற்கனவே நீதிமானாக்கப்பட்ட ஒரு பாவி, பாவத்தின் வழிகளிலிருந்து கழுவப்படுவதைக் குறித்து இங்கு கூறுகிறது. இது ***"பரிசுத்தமாக்கப்படுதல்"*** என்று அழைக்கப்படுகிறது.

நீதிமானாக்கப்பட்ட ஒரு பாவி, தன்னுடைய சுயசித்தத்தை வெறுத்து, தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதற்கான அழைப்பில் துவங்குகிறது. இங்கு நீதிமானாக்கப்பட்ட நிலை என்பது, பாவியாகிய ஒருவன் தன்னுடைய சுயாதீன நிலையைப் பயன்படுத்தி, தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தை செய்ய முயற்சிக்கிறான். இது ***"ஒப்புக்கொடுத்தல்" அல்லது "அர்ப்பணித்தல்"*** என்று அழைக்கப்படுகிறது.

இவ்விதமாக பாவ வழிகளிலிருந்து விடுபடுவதற்கு தேவனும் அவருடைய வழிநடத்துதலும் அவசியம் என்பதை ஒரு பாவி ஒப்புக்கொள்கிறான். இவ்விதமாக தன்னை தம்மிடத்தில் முழுமையாக ஒப்புக்கொடுத்த ஒருவரிடத்தில் தேவன் சில மாற்றங்களை கொண்டுவருவதை நாம் காண்கிறோம். அதைக் குறித்து வாசிப்போம் -

2கொரிந்தியர் 1:22

***"அவர் நம்மை முத்தரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்"***

இது தேவனுடைய பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்வதையும், ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுகிற நிலையையும் குறிக்கிறது. இவ்விதமாக பரிசுத்தஆவியை பெற்றவர்கள், தேவனுடைய வார்த்தைகளைப் பற்றிய அறிவு மற்றும் ஞானத்தில் வளர்வதை பின்வரும் வசனத்தில் காண்கிறோம்

1கொரிந்தியர் 2:14

***"ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்"***

பரிசுத்தஆவியின் உதவியால் மட்டுமே ஒருவர் தேவனுடைய வார்த்தைகளை புரிந்துகொள்ளமுடியும். ஒரு பாவி பாவ வழிகளிலிருந்து பரிசுத்தமாக்கப்படுவது என்பது சத்தியத்தின் வல்லமையின் மூலமாக மாத்திரமே சாத்தியப்படும் (யோவான் 17:17).

இவ்விதமாக உலக மனுக்குலத்தின் இரட்சிப்பு மற்றும் பரிசுத்தமாக்கப்படுதலுக்கான தேவனுடைய ஏற்பாடுகளும், சத்தியத்தின்மூலமே என்பதை வாசிக்கிறோம் -

1தீமோத்தேயு 2:3,4

***"நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும்,***

***சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்"***

இதுவே எல்ல மனுஷருக்குமான தேவனுடைய திட்டமாகும்.

இதற்கு இணையாகவும், இந்த சத்தியத்தை மறைக்கவும், சாத்தான் ஏற்படுத்தின பொய், மனித முயற்சிகளில் மூலமாக மாத்திரமே பரிசுத்தமாக்கப்படுதல் சாத்தியப்படும் என்ற பெயர்சபையின் நம்பிக்கையாகும்.

இயேசுவின் மீது விசுவாசம் வைத்தபிறகு, ஒருவர் தன் பாவ வழிகளிலிருந்து விடுபடுவதற்கு தன் சுயசித்தத்தைக் கொண்டு முயற்சிப்பதையே கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்பதும், அதன்மூலம் "***பரலோகத்திற்கானஇரட்சிப்பை***" பெற்றுக்கொள்ளலாம் என்றும் எண்ணுகின்றனர். இது ஒரு மகா வஞ்சனையாக இருக்கிறது.



### ஆறாம் வெள்ளிக்காசு

## "தெரிந்தெடுத்தல்"

இந்த மாபெரும் சத்தியம், சபையுடனும், தேவனுடைய திட்டத்தில் அது தெரிந்து கொள்ளப்படுகிற விதத்தோடும் தொடர்புடையதாக இருப்பதை வாசிக்கிறோம்

எபேசியர் 1:4

***"நமக்கு முன்பாக அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே"***

இவ்வசனம்ஆறாவது மாபெரும் தெய்வீக சத்தியமும் -"***தெரிந்தெடுத்தலைப் பற்றின உபதேசம்***" என்று பிரபலமாக அழைக்கப்படுகிறதான உபதேசத்தை விவரிக்கிறது.

இந்த மாபெரும் சத்தியம் உலகத்தோற்றத்துக்கு முன் "***நம்மை***" தேவன் தெரிந்துகொண்ட விதத்தைக் குறித்துப் பேசுகிறது. இங்கு "***நம்மை***" என்பது யாரைக் குறிக்கிறது? இங்கு "***நம்மை***"என்று பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுவது - எபேசு சபையை மாத்திரம் குறிப்பதில்லை என்பது தெளிவாகிறது.

அதே சமயம் அது முதலாம் நூற்றாண்டின் ஆதிகால சபையையும் குறிப்பதில்லை. ஆனால் **அது, சுவிசேஷயுகம் முழுவதுமாக தெரிந்தெடுக்கப்படுகிற சபையாகிய - கிறிஸ்துவின் சரீரத்தை தீர்க்கதரிசனமாக குறிப்பிடுவதாகும்.**

மேலும், இங்கு "***நம்மை***" என்பது தனிப்பட்ட நபர்கள் முன்குறிக்கப்பட்டு தெரிந்தெடுக்கப்படுவதை குறிப்பிடாமல், ஒரு வகுப்பாரை குறிப்பதாக இருக்கிறது.

தனிப்பட்ட நபர்கள் தெரிந்தெடுக்கப்படுவது ஒரு உண்மையான தெரிந்தெடுத்தலாக இல்லாமல், தேவன் பட்சபாதம் காட்டுகிறதுபோல இருக்கும். அது உண்மையல்லவே.

தேவன் அப்படிப்பட்ட ஒரு வகுப்பாரை தெரிந்தெடுத்து அவர்களைப் பற்றின விவரம் மற்றும் அவர்களுக்கான நிபந்தனைகளை "***தெரிந்தெடுத்தலுக்கென***" நிர்ணயம் செய்திருக்கிறார்.இது

"***உலகத்தோற்றத்துக்கு முன்னமே***" ஏற்படுத்தப்பட்டிருந்தது.

தெரிந்தெடுத்தல் என்பதே "***அழைப்பு***" என்றும், கிறிஸ்துவின் மகிமையான சரீரம் உருவாக்கப்படுவதாகும்.

இதற்கு இணையாகவும், இந்த மகிமையான சத்தியத்தை "***மறைக்கவும்***" சாத்தான் ஏற்படுத்தின பொய்யானது, இந்த தெரிந்தெடுத்தல் என்பது முன்குறிக்கப்பட்ட தனி நபர்களை குறித்தது என்பதாகும். சில வசனங்களை தவறாக புரிந்துகொண்டதால் உண்டான குழப்பமேஇது.

ஜான் கெல்வின் என்பவர் **'தனிப்பட்ட நபருடைய தெரிந்தெடுத்தல் மற்றும் இரட்சிப்பு"** பற்றின கொள்கையை கொண்டுவந்தார். இந்த கொள்கையின் அடிப்படையில், ஒரு சில முன்குறிக்கப்பட்ட தனி நபர்கள் மட்டும் இரட்சிப்படைய தேவன் திட்டமிட்டுள்ளார் என்றும், மற்ற அனைவரும் நித்திய ஆக்கினையான நரக ஆக்கினைக்கு செல்வார்கள் என்றும் போதிக்கப்பட்டது. இந்தக் கொள்கை பின்வரும் வசனத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது -

கலாத்தியர் 1:15

"***அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்..***"

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி, பவுல் அப்போஸ்தலன் இரட்சிப்புக்கு ஏதுவாக முன்குறிக்கப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்ட விசேஷத்தைப் பெற்றிருப்பதாக காண்பிக்கப்பட்டது. ஆனால் இங்கு அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் சொல்லவருகிற காரியம் இதற்கு அப்பாற்பட்டதாகும். இங்கு இப்படிப்பட்ட முன்குறிக்கப்பட்ட தெரிந்தெடுத்தலைக் குறித்து பேசவில்லை என்பதை நிருபிக்க ஒரு வசனத்தை மேற்கோள் காட்டுவது போதுமானதாகும் -

1கொரிந்தியர் 9:27

"***மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என்சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்***"

ஆம் இங்கு தெளிவாக சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆனால் இருண்ட யுகத்தின் கள்ள உபதேசத்தின் மூலம் இது குழப்பப்பட்டிருந்தது.



### ஏழாம் வெள்ளிக்காசு

# "தேவனைப் பற்றின சத்தியம்"

அடுத்த மாபெரும் சத்தியம் தேவனைப் பற்றின சத்தியமாக இருப்பதை வாசிக்கிறோம் -

யோவான் 17:3

"***ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும்..***"

இங்கு தேவன் யார் என்று.. இயேசு தாமாக சாட்சிகொடுப்பது போன்று அடையாளம் காண்பிக்கும் ஏழாவது மாபெரும் தெய்வீக சத்தியத்தை விவரிக்கிறது. இதைக் குறித்து பவுல் அப்போஸ்தலனும் சாட்சிகொடுக்கிறார்-

1தீமோத்தேயு 2:5 / 1கொரிந்தியர் 8:6

***"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.."***
***"பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு.."***

ஆம். பரலோகப்பிதா ஒருவரே மெய்யான தேவன் என்பதை இயேசுவும் அப்போஸ்தலனாகிய பவுலும் சாட்சி கொடுக்கிறார்கள். மேலும் தம்மை சிருஷ்டி என்றும், தேவனுடைய முதலாவது சிருஷ்டி என்றும் இயேசு தெளிவாக சாட்சி கொடுக்கிறார் -

வெளிப்படுத்தல் 3:14

***"உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும்,***
தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது"

இங்கு தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு இணையாகவும் , இந்த மாபெரும் தெளிவான சத்தியத்தை "***மறைக்க***" சாத்தான் உருவாக்கின பொய் இன்று அநேகராலும் பிரபலமான போதனையாக ஏற்றுக்கொள்ளப்படுகிற, தேவதூஷணமான உபதேசமாகிய "***திருத்துவம்***" பற்றின போதனையாகும்.

இந்த போதனையானது, தேவன் எனப்படுபவர் மூன்று நபர்களை உள்ளடக்கி அதே சமயம் ஒரே தேவனாக இருப்பதாக சொல்கிறது. இதன்மூலம் பரலோகப்பிதா மற்றும் தேவனுடைய குமாரனாகிய இயேசு மற்றும் பரிசுத்தஆவியாகிய மூவரும் ஒரே தேவனாக இருப்பதாக கருதப்படுகிறது. இதற்கு ஆதாரமாக **1+ 1+ 1= 1** என்று போதிக்கப்படுகிறது. இதை "***ஒரு தெய்வீக இரகசியம்***" என்று அழைக்கிறார்கள். ஏனெனில் இந்த கருத்து விவரிக்கமுடியாததும், அதைத் தோற்றுவித்த திருத்துவ கொள்கையாளர்கள் மூலமாக புரிய முடியாததுமாகஇருப்பதாகும்.



**எட்டாம் வெள்ளிக்காசு**

# "இரண்டாம் வருகை"

அடுத்த மாபெரும் சத்தியம் மிகவும் எதிர்பார்க்கப்படுகிற சம்பவமாகிய நம் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றியதாகும் -

1தெசலோனிக்கேயர் 5:2,4

***"இரவிலே திருடன் வருகிறவிதமாய் கர்த்தருடைய நாள் வருமென்று***
***நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்"***
***"சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக,***
***நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே"***

இந்த வசனம் நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி விளக்குகிறது. இந்த வருகை அவர் வாக்குத்தத்தம் பண்ணினதாகும்.

யோவான் 14:3

***"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு,***
***நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி,***

*நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்"*

ஆதிகால சபையின் நாட்களிலிருந்தே கிறிஸ்தவர்கள், கர்த்தர் பரலோகத்திலிருந்து திரும்ப வருவதை எதிர்பார்த்துள்ளனர். ஆனால் அவருடைய இரண்டாம் வருகையைப் பற்றின வசனங்கள், ***"இரவிலே திருடன் வருகிறவிதமாய்"*** சம்பவிக்கும் என்று விவரிக்கின்றன. இது இரண்டாம்வருகை யாரும் அறியாதவண்ணம் இரகசியமாக சம்பவிப்பதை அடையாளமாக கூறுகிறது.

ஆனால் 1தெசலோனிக்கேயர் 5ம் அதிகாரம் 4ல், ***"சகோதரரே"*** எனப்படுபவர்கள் இந்த விஷயத்தைக் குறித்து இருளில்(அறியாமையில்) இல்லாமல், அதை புரிந்துகொள்வார்கள் என்று வாசிக்கிறோம். இந்த மாபெரும் சத்தியத்தைப் பற்றின அனைத்து விபரங்களையும் நாம் ஏற்கனவே இரண்டாம் வருகையைப் பற்றிய மூன்றுபாக ஆராய்ச்சியில் கண்டோம் .

இது உண்மையில் லவோதிக்கேயா சபையின் காலப்பகுதியில் உள்ளவர்களுக்கு விலையேறப்பெற்ற சத்தியமாகும்.

இதற்கு இணையாகவும், இந்த சத்தியத்தை ***"மறைக்கவும்"*** சாத்தான் கூறின பொய் பின்வரும் வசனத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது -

மத்தேயு 24:36

***"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்"***

மாற்கு13:32

***"அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்"***

இவ்வசனங்கள், ஒருவரும் ஒருபோதும் அதை அறிந்துகொள்ளமுடியாது என்பதற்கு ஆதாரமாக பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் இந்த மகிமையான காரியத்தைக் குறித்து, வேத வசனங்களில் ஆராய முன்வருவதில்லை.

ஆனால் எப்போதும் **"இயேசு வருவார்"** என்றே நம்பப்படுகிறது.

ஆனால் இப்பொழுதோ ***"இயேசு சீக்கிரத்தில் வருவார்"*** என நம்பப்படுகிறது. இந்த காரியத்தைக் குறித்த சத்தியம் ஏற்றசமயத்தில் வெளியாக்கப்படும்பொழுது எவ்வளவு அதிர்ச்சி உண்டாகும் என்பதை கற்பனை செய்து பார்ப்பது அவசியம்.



**ஒன்பதாம் வெள்ளிக்காசு**

## "கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சி"



அடுத்த மாபெரும் சத்தியம் மகிமையானதும்

இரகசியமானதுமான காரியத்தைக் குறித்து வெளிப்படுத்துகிறது.

வெளிப்படுத்தல் 20:4

***"அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்"***
***இது பின்வரும் வசனத்திலும் காணப்படுகிறது***

வெளிப்படுத்தல் 20:6

***"இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்"***

இந்த இரண்டு வசனங்களும் ஒன்பதாவது மாபெரும் தெய்வீக சத்தியமான, பூமியின் மீதான கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சி பற்றி விவரிக்கிறது. இது நீண்டகால ஜெபத்தின் நிறைவேறுதலாக இருக்கும் -

மத்தேயு 6:10

***"உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.."***

ஆம். நீண்ட கால வாக்குத்தத்தம்.. தேவனுடைய இராஜ்யம் பூமியின்மீது ஸ்தாபிக்கப்படும்.
இது உலக மனுக்குலம் அனைவரின் நியாயத்தீர்ப்பின் நாளாக இருக்கும் -
கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்(1கொரிந்தியர் 15:22). அப்பொழுது இயேசு மற்றும் சபையிடமிருந்து பூமிக்குரிய இரட்சிப்பை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு அளிக்கப்படும் என்று வாசிக்கிறோம் -

வெளிப்படுத்தல் 22:17

***"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள், கேட்கிறவனும் வா என்பானாக.. விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்"***

ஆம். இந்த மாபெரும் வேலையில் இயேசுவோடுகூட அவருடைய 'மணவாட்டியாகிய" சபை மகிமையில் இணைந்திருக்கும்

இதுவே அந்த **"காணாமல்போன வெள்ளிக்காசு" அல்லது இந்த உவமையில் 'ஸ்திரீ" (சபை) தொலைத்த 'வெள்ளிக்காசு"** ஆகும்.

இதற்கு இணையாகவும், இந்த மாபெரும் சத்தியத்தை மறைக்கவும் சாத்தான் உருவாக்கின பொய் - இது பல நூற்றாண்டுகளாக சபையினுடைய பார்வையிலிருந்து காணாமல்போயிருந்தது.

- இன்றும்கூட பெயர் கிறிஸ்தவ சபைகளில் இந்த சத்தியங்களைப் பற்றிய விபரங்களை அநேகர் அறியாமல் இருக்கிறார்கள்.

மேலும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையால், இந்த ஆயிரவருட ஆளுகை என்பது ஏற்கனவே போப்பு மார்க்கத்தின்கீழ் கிபி 799 முதல் கிபி 1799 வரை ஆளுகை செய்யப்பட்ட ஆயிரவருடங்கள் என்று நம்பப்படுகிறது.

இதை "***பரிசுத்த ரோம சாம்ராஜ்யம்***" நடத்தியதாகவும் நம்பப்படுகிறது.



பத்தாம் வெள்ளிக்காசு

## "இரண்டாம் மரணம்"



இந்த கடைசி சத்தியம் துணிகரமாக, மனந்திரும்ப விரும்பாத பாவிகள் மீதான தேவனுடைய இறுதியான நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேசுகிறது -

வெளிப்படுத்தல் 21:8

***"பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்"***

இந்த வசனம் பத்தாவது மாபெரும் தெய்வீக சத்தியமாகிய - ***"இரண்டாம் மரணத்தை"*** குறித்து பேசுகிறது. இந்த சத்திய அறிவை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை தேவனுடைய மிக பெரிதான கிருபையினால் பெற்றுக்கொண்டபிறகும் தெய்வீக நீதியின் ஒழுங்குமுறையை துணிகரமாக எதிர்த்தவர்கள் மீது வெளிப்படும் தேவனுடைய நீதியான அதே சமயம் இறுதியான தண்டனையாகும். இந்த வகுப்பாரைக் குறித்து தீர்க்கதரிசனமாக நாம் வாசிப்போம் -

**ஏசாயா 26:10**

***"துன்மார்க்கருக்குத் தயைசெய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான். நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதே போகிறான்"***

இந்த இரண்டாம் மரணம் என்பது ***"அக்கினி மற்றும் கந்தகம்"*** என்பதன்மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. இது முழுமையான அழிவைக் குறிக்கிறது. ஏனெனில் தேவனுடைய பிரமாணத்தின்படி - ***"பாவத்தின் சம்பளம் மரணமாகும்"(ரோமர் 6:23)***

கல்வாரி சிலுவையில் இயேசுவின் மரணத்தின்மூலம் அனைவருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உயிர்த்தெழுதலின்மூலம் இல்லாமல்போகிற, தனிப்பட்டவர்களுடைய பாவத்தின் மூலம் பெறப்படும் மரணதண்டனையாக இருப்பதை வாசிக்கிறோம் -

*எரேமியா 31:29,30*

***"பிதாக்கள் திராட்சக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள்கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான். எந்த மனுஷன் திராட்சக் காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்"***

இங்கு மரணத்திற்குள்ளாகுபவர்கள் தங்களுடைய சொந்த, துணிகரமான பாவத்தினால் மரிப்பவர்களாவர். இவர்களுக்கு மீட்பு அல்லது உயிர்த்தெழுதல் என்பது இல்லை.
இது இறுதியும், முழுமையுமான அழிவாக இருக்கும்.

இதற்கு இணையாகவும், இந்த மாபெரும் சத்தியத்தை மறைக்கவும் சாத்தான் உருவாக்கின பொய்யானது -

"*நித்திய வேதனை ஸ்தலமாகிய நரகம்*" - இங்கு அழியாத ஆத்துமாக்களை நித்தியத்திற்கும் வாதிக்க தேவன் ஏற்படுத்தின இடமாக கருதப்படுகிறது.

இன்று பெயர் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் தேவனுக்கு பயந்து அவரை ஆராதிப்பது இந்த பயத்தை அடிப்படையாகக் கொண்டும், நரகத்தின் அக்கினிக்கு தப்பவேண்டும் என்ற முயற்சியினாலுமே இருக்கிறது.

ஆனால் வேதம் தெளிவாக கூறுவதை வாசிக்கையில் -

மத்தேயு 10:28

***"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்கவல்லவருக்கே பயப்படுங்கள்"***

ஆம். நரகம் என்பது ஜீவன் மற்றும் ஆத்மாக்கள் அழிக்கப்படும் இடமாக வேதம் போதிக்கிறது.

இவைகளே 'பத்து வெள்ளிக்காசுகள்" அடையாளப்படுத்துகிற பத்து மாபெரும் தெய்வீக சத்தியங்களாகும்.

வேதத்தின் இந்த பத்து மாபெரும் சத்தியங்கள் பின்வரும் அடையாளத்தின்மூலமாகவும் குறிப்பிடப்படுகிறது -

சங்கீதம் 144:9

***"கர்த்தாவே நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன். தம்புரினாலும் பத்து நரம்பு வீணையினாலும் உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்"***



தேவனை உண்மையாக துதிப்பது என்பது இந்த "*பத்து நரம்புகள்*" அல்லது 'பத்து மாபெரும் சத்தியங்களைப் பற்றின ஞானத்தின் மூலமே ஏறெடுக்கப்படும்.

இந்த "*பத்து வெள்ளிக்காசுகளும்*" "*ஸ்திரீயாகிய*" சபைக்கு, அவர்களுடைய நிச்சயதார்த்தத்தின்போது அளிக்கப்பட்டதாக வசனங்களில் வாசிக்கிறோம் -

யூதா 3

***"..பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள்.."***

யோவான் 16:13

***"சத்திய ஆவியாகிய அவர்வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்"***

ஆம். சுவிசேஷயுக ஆரம்பத்தில் "*ஸ்திரீயாகிய*" சபை - இந்த பத்து வெள்ளிக்காசுகளாகிய பத்து மாபெரும் சத்தியங்களைப் பெற்றது.

மேலும் இறுதியாக, **யூதர்களுடைய திருமண சடங்கில் இந்த 'பத்து வெள்ளிக்காசுகளை" கலியாணத்தின்போது நெற்றியில் அணிந்து காண்பிப்பதுபோல - 'ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்தின்போதும்" அப்படியே காண்பிக்கப்படும்.**

**ஆம் அந்த பத்து மாபெரும் சத்தியங்கள் 'நெற்றியின்மீது" அணிந்து காண்பிக்கப்படுவது என்பது சபையானது மணவாளன் மூலம் கலியாணத்திற்கு முன்பு பரிசோதிக்கப்படும்போது அந்த பத்து சத்தியங்களை பற்றின ஞானத்தால் நிறைந்திருப்பதைக் குறிக்கிறது -**

வெளிப்படுத்தல் 19:7

***"நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்கு துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னைஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்"***

இறுதியாக இந்த பத்து மாபெரும் தெய்வீக சத்தியங்களைக் குறித்து பின்வரும் நிழலில் காண்கிறோம் -

ஆதியாகமம் 24:10 / 61

***"பின்பு அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டுபோனான். தன் எஜமானுடைய சகலவித உச்சிதமான பொருள்களும் அவன் கையில் இருந்தன. அவன் எழுந்து புறப்பட்டுப்போய், மெசொப்பொத்தாமியாவிலே நாகோருடைய ஊரில்சேர்ந்து..."***

***"அப்பொழுது ரெபெக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள் மேல் ஏறி, அந்த மனிதனோடேகூடப் போனார்கள்"***

இந்த அடையாளங்களை நாம் ஏற்கனவே முந்தைய பாடங்களில் பார்த்திருக்கிறோம்.

**ரெபெக்காள் - கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையைக் குறிக்கிறாள்**

**எலியேசர் - பரிசுத்தஆவியைக் குறிக்கிறார்**

**எஜமானுடைய பத்து ஒட்டகங்கள் - தேவனுடைய பத்து மாபெரும் தெய்வீக சத்தியங்கள் -**

ஒட்டகங்கள் - மிகப்பெரிய கொள்ளளவில் தண்ணீரை உட்கொள்ளும் திறமையை பெற்றிருப்பதுபோல - இந்த பத்து தெய்வீக சத்தியங்களைப் பற்றிய ஞானமும் தேவன் தம் வார்த்தையாகிய வேதத்தில் வெளிப்படுத்தியுள்ள அனைத்து சத்தியங்கள் பற்றின ஆழமான, அதேசமயம் முழுமையான புரிந்துகொள்ளுதலுக்கு வழிநடத்துகிறது.

**மேலும் ரெபெக்காள் எலியேசருடன் , ஈசாக்கின் திருமணத்திற்கு 'பத்து ஒட்டகங்கள்" மீது அழைத்துக்கொண்டு வருவதுபோல, சபை வகுப்பாரும் இந்த பத்து சத்தியங்களின்மூலம் பரிசுத்தஆவியுடன் ஆட்டுக்குட்டியானவருடைய திருமணத்திற்கு கொண்டு சேர்க்கப்படுவார்கள் ஆமென்.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/